# பெப்ரவரி – 05 – திங்கள்

## புனிதஅகத்தம்மாள்

## “அவரைத் தொட்ட அனைவரும் நலமடைந்தனர்’’ (மாற்.6:56)

**முதல் வாசகம் : 1அரசர் 8 : 1 - 7. 9 - 13**

அக்காலத்தில் சாலமோன் ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையைத் தாவீதின் நகர் சீயோனினின்று கொண்டுவர விரும்பினார். அதற்காக அவர் இஸ்ரயேலின் பெரியோ ரையும் எல்லாக் குலத்தவர்களையும் இஸ்ரயேல் மக்களின் மூதாதையர் வீட்டுத் தலைவர்களையும் எருசலேமிற்குத் தம்மிடம் வரும்படி அழைத்தார். அதற்கிணங்க அவர்கள் அனைவரும் ஏழாம் மாதமாகிய ”ஏத்தானிம்” மாதத்தின் பண்டிகையின் போது அரசர் சாலமோன் முன் கூடினர். இஸ்ரயேலின் பெரியோர் அனைவரும் வந்தனர். குருக்கள் பேழையைத் தூக்கிக் கொண்டனர். ஆண்டவரின் பேழை சந்திப்புக் கூடாரம் கூடாரத்தின் தூய கலன்கள் அனைத்தை யும் குருக்களும் லேவியரும் சுமந்துசென்றனர். அரசர் சாலமோனும் அவரிடம் வந்து குழுமிய இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பினர் அனைவரும் எண்ணவோ கணக்கிடவோ முடியாத அளவு திரளான ஆடுகளையும் மாடுகளையும் பேழைக்கு முன்னால் பலியிட்டனர். பின்னர் குருக்கள் ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையைக் கோவில் கருவறையாகிய திருத்தூயகத்தில் அதற்குரிய இடத்தில் கெருபுகளின் இறக்கைகளின் கீழே கொண்டு வந்து வைத்தனர். அக்கெருபுகள் பேழை இருக்கும் இடத்தில் தங்கள் இரண்டு இறக்கைகளையும் விரித்து பேழையையும் அதன் தண்டுகளையும் மூடியவாறு இருந்தன. இரு கற்பலகைகளைத் தவிர வேறொன்றும் பேழைக்குள் இல்லை. இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய பொழுது அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்ட ஓரேபு மலையில் மோசே அதற்குள் வைத்தவை அவை. குருக்கள் தூயகத்தினின்று வெளியே வருகையில் ஒரு மேகம் ஆண்டவரின் இல்லத்தை நிரப்பிற்று. அம்மேகத்தின் பொருட்டு குருக்கள் திருப்பணி புரிய அங்கு நிற்க இயலவில்லை. ஏனெனில் ஆண்டவரின் மாட்சி அவர் இல்லத்தை நிரப்பிற்று. அப்பொழுது சாலமோன் ”ஆண்டவரே! நீர் கரிய மேகத்தில் உறைவதாகக் கூறினீர். நீர் என்றென்னும் தங்கி வாழ உயர் இல்லம் ஒன்றை உமக்காக நான் கட்டியுள்ளேன்” என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் உறைவிடத்திற்கு வல்லமையோடு எருந்தருளும்.

**நற்செய்தி : மாற்கு 6 : 53 - 56**

அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும் மறு கரைக்குச் சென்று கெனசரேத்துப் பகுதியை அடைந்து படகைக் கட்டி நிறுத்தினார்கள்.அவர்கள் படகைவிட்டு இறங்கிய உடனே, மக்கள் இயேசுவை இன்னார் என்று கண்டுணர்ந்து,அச்சுற்றுப் பகுதி எங்கும் ஓடிச் சென்று, அவர் இருப்பதாகக் கேள்விப்பட்ட இடங்களுக் கெல்லாம் நோயாளர்களைப் படுக்கையில் கொண்டு வரத் தொடங்கினார்கள்.மேலும் அவர் சென்ற ஊர்கள், நகர்கள், பட்டிகள் அனைத்திலும் உடல் நலம் குன்றியோரைப் பொதுவிடங்களில் கிடத்தி, அவருடைய மேலுடையின் ஓரத்தையாவது அவர்கள் தொட அனுமதிக்குமாறு அவரை வேண்டினார்கள். அவரைத் தொட்ட அனைவரும் நலமடைந்தனர்.

**தியானம்:** கடவுளின் அன்பைப் பெற்றுக் கொள்வதே நமது பக்தி முயற்சிகளின் உள்ளார்ந்த நோக்கமாக இருக்க வேண்டும். சுருக்கமாக கூறினால் நாம் இறை நம்பிக்கையோடு வாழவேண்டும் என்பதே!. இறைமகன் இயேசு மக்கள் மத்தியில் பிரபல்யமாயிருந்தார், அவருடைய குணமளிகும் ஆற்றல் ஏராளமான மக்களை அவரிடம் கூட்டிவந்தது. நம்பிக்கையோடு அவரைத் தேடிவந்த அனைவரும் தங்களது தேவகளைப் பெற்றார்கள். அவர்கள் நம்பிக்கையே பலருடைய நோய்களை குணமடைய மருந்தாக உதவியது. “அவருடைய மேலாடையின் ஓரத்தையாவது அவர்கள் தொட அனுமதிக்குமாறு அவரை வேண்டினார்கள்.” என்பதை நாம் நற்செய்தில் பார்க்கின்றோம். நாமும் நமது வாழ்க்கையில் எது நடந்தாலும் அது இறைச்சித்தத்துடன் நடக்கிறது என்பது புரிந்துகொள்ள வேண்டும். எமது பக்தி முயற்சிகள் யாவும் இறையன்பை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். நமது தேவைகளில் நம்பிக்கையோடு ஆண்டவரிடம் வருவோம். அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்.